வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2711/அ12023, நாள். 01 .07.2024.

பொருள்: பள்ளிக்கல்வி – பள்ளிக்கல்வித் துறையில் பொதுப்பணி/ அமைச்சுப் பணியில் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணிபுரியும் பணியாளர்கள் – வேறு அலுவலகங்களுக்கு மாறுதல் அளித்தல்– அரசாணை பெறப்பட்டது– விவரம் கோருதல் – சார்பு.

பார்வை சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.040524/அ3/இ1/2024, நாள்.02.07.2024.

-----

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அலுவலகங்கள்/ பள்ளிகள் 30.06.2024 அன்றைய நிலவரப்படி 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் நேர்முக உதவியாளர், கண்காணிப்பாளர்/ பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் / உதவியாளர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1,2,3 ஆகிய விவரங்கள் இணைப்பில் கண்ட படிவத்தில் பணியிட வாரியாக ( category wise) தனித்தனியாகவும் மற்றும் இல்லை என்றால் இன்மை அறிக்கையுடன் 03.07.2024 இன்று மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக அ1 பிரிவில் தனிபநர் முலம் நேரில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

சான்று

இவ்வலுவலகம் / இப்பள்ளியில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் 30.06.2024 நிலவரப்படி 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் விவரங்கள் எவரும் விடுபடவில்லை என சான்றளிக்கப்படுகிறது.

இணைப்பு –படிவம்

// ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்.
வேலூர்.

பெறுநர்

1) மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை/தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்) தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2) அனைத்து அரசு/நகராட்சி/ உயர்/மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள்